# திறவுகோல்

2057

வைகாசி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# அரசியல் தூண்டிலில் அப்பாவிக் குழந்தைகள்!

ஓர் அரசியல் அற்ற கூட்டத்தால் அரசியல் மயமாகி இருக்கிறது நவீன தமிழ்ச் சமூகம். சமூக ஊடகங்கள் வழி புதியதோர் அரசியல் மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதை வரவேற்பதா மறுதலிப்பதா என்பது இப்போதைக்கு யாருக்கும் விளங்கவில்லை. போதிய அடிப்படை கொள்கை அரசியல் புரிதலற்ற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஒருவிதமான குதூகலமும் முதல் நாள் முதல் காட்சி கண்டு களித்த திருப்தியும் இருப்பதைக் காண முடிகிறது. அதேவேளையில், படித்த பண்பட்ட கொள்கைப் பிடிப்புள்ள பெரியவர்களிடம் ஒரு மாபெரும் துக்கம் நடந்துவிட்ட சோகம் காணப்படுவதை அவர்களது அங்கலாய்ப்பு மற்றும் விரக்தி பேச்சினூடாக அறிய இயலுகிறது.

சரி தவறு இனி பேசி பயனில்லை. மக்களாட்சியின் மாண்பு எனப்படுவது மக்களின் தீர்ப்பை உளமார ஏற்பதே ஆகும். தமிழ்ச் சமூகம் தொன்றுதொட்டு புதிய மாற்றம் குறித்து சிந்திப்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளதை **1967, 1977, 1996** களில் நிகழ்ந்த அரசியல் ஆட்சி மாற்றங்கள் வழி உணர முடியும். இவற்றின் பின்புலத்தில் நல்லாட்சி காண விழையும் தொலைநோக்குப் பார்வை இருந்தது என்பதை நாடே அறியும்.

அதேவேளையில், **2026** இல் நடைபெற்ற முடிந்துள்ள ஒரு விரல் புரட்சியில் உணர்ச்சி மேலோங்கி இருப்பதையே தற்போது வரை காண இயலுகிறது. மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போர்க் குணங்களை என்றும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. பெருந்திரளான இந்தி எதிர்ப்புப் போராட்டம் மற்றும் காளைப்பிடி தடை எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றை ஈண்டு உணர்வு மிக்க புரட்சிக்கு எடுத்துக்காட்டுகளாகச் சொல்ல முடியும். இஃது அதீத திரைக் கவர்ச்சி மற்றும் தொடர் சமூக ஊடகப் பயன்பாட்டினூடாக நிகழ்ந்த தட்டையாகிப் போன இளைய சமூகத்தின் உணர்ச்சிப் புரட்சியாகும்.

எப்போதும் தமிழக அரசியலை முதிர்ச்சி மிக்க பெரியவர்களே முன்னெடுத்துச் சென்று வந்துள்ளனர். இப்போது முதல்முறையாக பால் குடிக்கும் குழந்தைகள் முதற்கொண்டு பள்ளி செல்லும் பிள்ளைகள் வரை ஓர் அடிப்படை அரசியல் புரிதலும் இல்லாது அழுது அடம்பிடித்து பெற்றோர்களை விரும்பியும் விரும்பாமலும் ஓர் இக்கட்டான சூழலுக்குத் தள்ளியது காலத்தின் கோலமாகும். அதாவது, பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் குச்சி மிட்டாயும் குருவி ரொட்டியும் வாங்கிக் கொடுத்தது போன்று தமிழக அரசியல் வரலாற்றில் முதல்முறையாக குழந்தைகள் தம் பெற்றோர்கள் வழியாக ஆட்சி மாற்றத்தை வாங்கிக் கொடுத்துள்ளதாக நோக்க முடிகிறது. இதை மரபுப் பிழை என்று அழைப்பதை விட மழலைப் பிழை என்று தான் குறிப்பிட முடியும்.

கல்விக் கூட வாயிலைத் தாண்டி வகுப்பறையில் கேடு தரும் போதை கூட அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் நுழைந்துள்ளது என்று அறுதியிட்டு கூற இயலும். ஆனால், ஆபத்து நிறைந்த திரை போதை எங்கும் வியாபித்து இருப்பது என்பது காலக் கொடுமையன்றோ?

பிஞ்சுகளிடம் கூட இணையப் பயன்பாட்டு நுகர்வு அண்மையில் குடும்பங்களில் காணப்படுவது மலிந்துள்ளது வேதனைக்குரியது. பெற்றோர்கள் தம் பணி மற்றும் குடும்ப நெருக்கடிகளையும் குழந்தை வளர்ப்பு குறித்த போதாமையையும் எதிர்கொள்ளும் வழியறியாது இணையப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கும் போக்கும் இதுபோன்ற ஆபத்திற்கு வித்திடுவதாக உள்ளது.

இதனைக் குறிவைத்து அரசியல் சார் துல்லிய உளவியல் தாக்குதல்களை இளஞ்சிறார்கள் மத்தியில் நிகழ்த்தும் பெருவணிக ஈர்ப்பு அரசியல் நிறுவனங்களின் திட்டமிட்ட செயல்பாடுகள் இளைய சமூகத்தின் வழி நாட்டை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

எதிர்வரும் காலங்களில் இனி இதில் அனைத்து அரசியல் கட்சிகளும் பெருந்திரளாகத் தம் படை பரிவாரங்களை இறக்கக் கூடும். உண்மைகள் உறங்கிக் கொண்டிருக்க… நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளும் கவர்ச்சிப் பரப்புரையின் கட்டவிழ்ப்பில் பொய்களையும் புரட்டுகளையும் வதந்திகளையும் வாந்திகளையும் நம்பி தமிழ்ச் சமூகம் மூழ்கிப் போவதை அனுமதிக்கக் கூடாது.

ஊர் தோறும் புத்தகத் திருவிழாக்கள் கோலாகலமாக நடைபெற்றதை நாடே அறியும். அதில் புத்தகங்களும் ஏராளம் விற்பனையாகியதாகப் பல்வேறு புள்ளிவிவரங்கள் எடுத்துரைக்கின்றன. இவற்றில் பாதியளவாவது வாசிக்கப்பட்டிருந்தால் தமிழ்ச் சமூகம் இன்னும் ஒரு படி முன்னேற்றம் கண்டிருக்கும்.

அனைத்தையும் சுய படம் எடுத்து சுய தம்பட்டம் அடிக்கும் நெரிசலில் வாங்கிய புத்தகங்கள் வாசிக்கப்படாமலேயே நன்கு அலங்கரிக்கப்பட்ட புத்தக அலமாரியில் அடக்கமானது தான் மிச்சம். கைப்பேசியில் பரப்பப்படும் தொடர்க் கிளர்ச்சிக் காட்சிக் காணொலிகளில் மூழ்கி வீணடித்த நேரத்தில் ஒரு புத்தக வாசிப்பு எத்தனையோ நல்ல புரிதல்களை ஏற்படுத்தி இருக்கும்.

தேசிய, இடதுசாரி இயக்கங்களும் திராவிடமும், தனித்தமிழ் இயக்கமும் தம் தொடக்க கால அரசியல் நடவடிக்கைகளை குடிசை படிப்பகங்கள் வழி மக்களிடையே தத்தம் கொள்கைகளை நிறுவ முயற்சித்து வந்தன. இது வரலாறு. இஃது இளம் தலைமுறையினரை

ஒரு கொள்கைப் பற்றுள்ள சிறந்த குடிமகனாக உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.

வீடுகளில் குடும்பம் சகிதமாக தமக்கான அரசியல் கொள்கைகள் மற்றும் கருத்துகள் பல்வேறு உரையாடல்கள் மூலம் நிகழ்ந்து வந்தது என்பது இந்திய அளவில் தமிழ்ச் சமூகம் மேம்பட்ட சமூகமாக உருமாற்றமும் வளர்ச்சியும் அடைய வைத்தது எண்ணத்தக்கது. தேசிய, மார்க்சிய, திராவிட, அம்பேத்கரிய, தமிழ்த் தேசிய சிந்தனைகள் தத்தம் குடும்பங்களிலேயே அந்நியமாதல் ஆகத் தொடங்கியது என்பது நல்ல மாற்று அரசியலின் ஆகப் பெரும் வீழ்ச்சியாகும். நல்ல அரசியல் முன்னெடுப்புகள் குறைந்து நச்சு அரசியல் முன்னெடுப்புகள் மிகுந்து வருவது எதிர்கால தமிழ்நாட்டுச் சூழலுக்கு ஒருபோதும் உகந்ததல்ல. ஆட்சி மற்றும் அதிகார மாற்றங்கள் வெறும் உணர்ச்சிப் பெருக்கில் நிகழாமல் அறிவுப் பூர்வமாக நிகழ வேண்டியவை ஆகும். இளம் சமூகம் இனியாவது உண்மையான கொள்கை கொண்டுள்ள களத்தில் களமாடும் மக்களின் மனசாட்சியாகக் காணப்படும் மெய்யான கதாநாயகர்களைக் கண்டடைய முயற்சித்தல் நல்லது.

அதேபோல், அரசியல் கட்சிகளும் தம் சொந்த இலாபத்திற்காக பிஞ்சுக் குழந்தைகளின் மூளையில் முளையிலேயே நஞ்சை விதைக்க முற்படுவதைத் தவிர்க்க வேண்டும். பெற்றோர்கள் அரசியல் பக்கம் தம் கவனத்தைத் திசை திருப்பியுள்ள பிள்ளைகளிடம் நல்ல அரசியல் கருத்துகள் குறித்து ஆக்கப்பூர்வ உரையாடல் வைத்துக் கொள்வதை வாடிக்கையாக்கிக் கொள்ள வேண்டும். நிலையான அமைதி, நிம்மதியான வாழ்க்கை, நிரந்தர பொருளாதார வளர்ச்சி, சகோதரத்துவம் மற்றும் சமய நல்லிணக்கம் ஆகியவை தமிழ்ச் சமூகத்தில் என்றென்றும் நிலைத்திட நல்லோர் பலரும் அடிகோலுதல் நல்லது.

குறிப்பாக, அரசியல் தூண்டில் இரைகளாக அப்பாவிக் குழந்தைகளை ஆக்குதல் என்பது மனிதாபிமானமற்ற செயலே ஆகும். இது கண்டிக்கத்தக்கது. இந்த கொள்கையற்ற குழப்பமுற்ற முரட்டுப் பக்தர்கள் கூட்டம் என்பது மிகவும் ஆபத்தான ஒன்று.

அத்தகையோர் முதுகில் ஏறி காலம் முழுவதும் பயணம் செய்து விடலாம் என்று போடும் தப்புக்கணக்கு ஒருநாள் தப்பான கணக்காய் ஆகக் கூடும். தமிழரின் அறம் என்றும் தனித்துவமானது. அன்பும் நேயமும் அதன் உயிர்நாடி. அதில் கல்லெறிபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மனித குலத்தின் எதிரிகள் ஆவார்கள். இதை வலியுறுத்தும் அரசியல் தான் இப்போதைக்குத் தேவை. இந்த புள்ளியை நோக்கி அரசியல் அற்ற கூட்டத்தை நகர்த்துவது அவசர அவசியமாகும்.

—

முனைவர் மணி கணேசன்

# கள்ளிச் செடியும்

முல்லைக் கொடியும் அருகருகே.
பூமிக்குள் அந்தரங்க உறவு கொள்ளும்
வேர்கள்.

## தேனெடுக்கும்

அந்தச் சில கணங்களில்
பட்டாம்பூச்சிகளுக்கும்
பூக்களுக்குமிடையே
அழகாய் மலரும் காதல்.

## பயணக் களைப்பில்

வந்தமர்ந்த பறவையைத்
தாலாட்டுகிறது மரக்கிளை.

## உன் பெயரை எழுதிய பின்னரே

என் பெயர் எழுதுகிறது.
நான் வாங்கிய பேனா.

## மரங்கள் வரைந்ததும்

மேகங்களை வரைகிறது
தூரிகை.

## குடுவையளவு

வண்ணமீன்களின்
உலகம்.

## அடித்தடித்து

எழுதியிருந்தாலும்
அழகாக இருக்கிறது.
அம்மா -
என்னை நலம் விசாரித்து
எழுதிய கடிதம்.

## கப்பலை இயக்க

மாலுமிகளில்லை.
கரையொதுங்கிய
கப்பல் நழுவாமலிருக்க
நங்கூரங்களில்லை.
மழைநீரில்
முற்றத்தின்
நான்கு முகங்களிலும்
இனிதே நடைபெறுகிறது
குழந்தைகளின்
கப்பல் பயணம் ...!

## மாது மது மலர்.

போதை மலர்.

சொட்டு நீரை
தடாகம் என்றெண்ணி
தாகம் தணிக்கிறது.
களைப்பில் வந்த எறும்பு.

## பல மாதங்களுக்கு

முன்வந்த அவசரச் செய்தி;
சுற்றித்திரிந்து விட்டு;
மீண்டுமின்று
புதிதுபோல் வருகிறது
புலனத்தில்.



- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# பொருண்மை: ஏறுபோல் என்றும் உழைத்திட உயர்வாய்!

பா வகை: கழிநெடிலடி எழுசீர் ஆசிரிய மண்டிலம்

உயர்ந்திடு நீயும் உழைப்பினால் என்றும்
உயர்ந்திடச் சிறக்குமே வாழ்க்கை!

வியப்புடன் வாழ்ந்தால் வியக்குமே வானும்
வீறுடன் நாளுமே வாழ்வாய்!

நயமென வாழ்ந்தால் நலமென இருப்பாய்
நல்லவர் வழியினில் வெல்வாய்!

பயனென வாழ்ந்தால் பாங்கென ஆகும்
பயனிலா வாழ்வினில் அழகோ?

உழைத்திடும் வாழ்வே உயர்வென ஆகும்
உயரலாம் ஏறுபோல் உழைத்தால்!

பிழையிலா வாழ்வே பீடுடன் ஆகும்
பெருமையாய் வாழ்ந்திடு நாளும்!

தழைத்திடும் செடியாய் தன்னிலை உணர்வாய்
தலைமையைத் தந்திடும் உழைப்பு!

மழையினைப் போன்றே மண்ணிலே வீழ்வாய்
மகிழுமே இயற்கையும் நாளும்.

(ஏற்றமும் இறக்கமும் இயல்பென வாழ்ந்திடு)



பா வகை: கழி நெடிலடி எழுசீர் ஆசிரிய மண்டிலம்.

ஏற்றமும் இறக்கமும் இயல்பென வந்திடும்
இனிமையாய் ஏற்றிட வாழ்க்கையே!
ஊற்றெனச் சிந்தையில் உயர்வுடன் இருப்பதால்
உண்மையில் வாழ்க்கையும் உயருமே!

ஆற்றிலே நீருமே அழகென ஓடுமே
அறிவினால் வாழ்வினை வெல்கவே!

காற்றெனக் கடமையை நாளுமே செய்திட
காலமும் நிலையெனப் போற்றுமே!

மாற்றமாய் யாவையும் மாண்புடன் ஏற்றிட
மண்ணிலே நிலைக்குமே மகிழ்ச்சியே!

தேற்றமாய் வாழ்க்கையும் தெளிவென ஆகுமே
திண்ணமாய் இயல்புடன் வாழ்கவே!

போற்றிடும் மாந்தராய் மகிழ்வுடன் என்றுமே
புவியினில் அழகென வாழ்கவே!

ஏற்றமும் இறக்கமும் இயல்பென இருக்குமே
எதனையும் துணிவுடன் வெல்கவே!

- வாழ்வியல் கவி
(சா. நாகூர் பிச்சை) திண்டுக்கல்.

# ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை

தேநீர் போடுவார்
தோசை ஊற்றுவார்
கையெடுத்துக் கும்பிடுவார்
காலிலும் விழுவார்

இருபது நாள்களில்
தொகுதி முழுவதும்
வலம் வருவார்

எண்ணெயிலும்
வாயிலும்
வடை வடையாகச் சுடுவார்

வண்ணமும் அடிப்பார்
வர்ணஜாலமும் காட்டுவார்

மை
காயும் முன்னே
காணாமல் போய் விடுவார்

பீரங்கிகளின் முன்
துணிந்து நின்ற கதராடைகள்
பெற்றுக் கொடுத்தது சுதந்திரம்

செல்வந்தர்கள் மட்டும்
பெற்ற வாக்குரிமையை
அனைவருக்கும் பெற்றுக் கொடுத்தன
உயர்ந்த கைகள்

முடியாட்சியை
மண்ணில் சாய்த்து
மக்களாட்டியை
மலர விட்ட
தியாகிகளுக்கு
வணக்கம் வைப்போம்

என் வாக்கு
என் உரிமை என
அனைவரும்
ஆள்காட்டி விரலால்
பூமி நோக்கி அழுத்துவோம்
நல்ல தலைவர்
நிச்சயம்
முளைத்து எழுவார்

சுட்டு விரலின் பின்
சூட்டுவோம் மை!
இது நம் உரிமை!
தலையாய கடமை!

—

சா.கா. பாரதி ராஜா,
மனை எண்: 1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்),
திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732



# வழக்கமாகி விட்ட...

அப்படியாகி
விடுமோ
இப்படியாகி
விடுமோ
என்று பயந்த
பதற்ற விசயங்களில்
அப்படி எதுவுமே
நடக்காத போதும்

இது கிடைத்தால்
அது கிடைத்தால்
மகிழ்ச்சி
என்று எண்ணியவைகள்
நிகழும் கணத்தில்
அந்த அளவுக்கு
உணர்வை தராத போதும்

இதற்கு போயா

என மனித
மனங்கள் எண்ணுவது
வழக்கமான
ஒன்றாகி விட்டது

என்ன ஒன்று
அடுத்தவைகளில்
நிகழும் முன்னே
அதே பதற்றம்
அதே மகிழ்ச்ச

## இது வேறேயா?

பெருங்குரலெடுத்து
அமில வார்த்தைகளால்
வசை மொழி பாடுவதோடு
பிறரிடமும்
இப்படித்தான்
நடந்து கொண்டாய்
என்று சொல்கையில்

செயல் முடித்த
முடிவுக்கான
காத்திருப்பில்
பாதகமானால் என்ன செய்ய
பயந்து கொண்டிருக்கையில்

இழந்தால்
என்ன என்ன சிக்கல்கள்
வரும் என
யோசிக்காத
எதிர்மறை விசயங்களையும்
பிறர் நீண்ட பட்டியிலிடுகையில்

இது வேறேயா?

இதில் என்ன உள்ளது என்றால்?...

செய் பணி சிறப்புக்கு
சந்தோசப்பட்டால்
கடமையை செய்வதில்
என்ன உயர்வு?

பொழுது போக்கின்
ரசிப்பு உணர்வுக்கு
பணத்திற்கான
படைப்பு
இதில் என்ன சிறப்பு?

குடும்ப உறவுகளுக்கு
விரும்பியதை

அளித்தால்
இது என்ன பிரமாதம்?

நீண்ட முயற்சிக்குப்பின்
வரும் வெற்றி குதூலகத்தில்
எல்லாருக்கும் தான்
வெற்றியில் மகிழ்ச்சி
இது என்ன பெரிசா?

தொடர் தோல்வி கொடுத்த
அயர்ச்சியில்
புலம்பினாலோ
வருத்தப்பட்டலோ
யாருக்குத்தான்
தோல்வி இல்லை?

இப்படியாய்
யோசித்தாலோ
வினா எழுப்பினாலோ

சுவராஸ்யமற்ற
தன்முனப்பு இல்லாத
தூண்டுதல் கொடுக்காத
உணர்வுகளை வெளிப்படுத்தா
அர்த்தமற்ற வாழ்வு தான்...

## எப்பவுமே

செயல்பாட்டு
பயணத்தில்

இப்படி செய்ய
வேண்டும்

அப்படி செய்யக்கூடாது

இதற்கு முன்னுரிமை
கொடுக்க வேண்டும்

இதை பின்னர்
பார்க்கலாம்

என்பவை
எல்லாம்
எப்பொழுதுமே
உள்ளிலிருந்து தான்
வர வேண்டும்
என்பதில்லை

சுற்றி நடப்பவையை
உற்று நோக்கி
பிறரின்
வெற்றியின்
தோல்வியின்
காரணத்திலும்
பெறலாம்

பயணப்படுவை
வேறாய் இருந்தாலும்...

## விரும்புவன...

சிந்தனையற்ற
தனிமை

முடிவுக்கான காத்திருத்தலில்
பதற்றமின்மை

எதிர் மனிதர் பேசி முடிக்கும்
வரை காக்க வேண்டிய
பொறுமை

பிறர் சொல்வதால்
தானும் சேர்ந்து வைக்கும்

விமர்சனம்

புரிய மறுக்கும் இடத்தில்
நிறுத்த வேண்டிய
தன் நிலை விளக்கம்

இவை
மானுடம்
விரும்புவன..

ஆனால்
மிகப்பலராய்
அடைய முடியாதவை..

## அதுக்கும் மேலே

பெற்ற உதவிக்கு
நீங்க நல்லா இருக்கணும்

வாழ்நாள் முழுவதும்
மறக்க மாட்டேன்

பெரிய மனசு
உங்களுக்கு

நன்றி சொல்ல
வார்த்தைகள் போதவில்லை

இப்படி
மனப்பூர்வமாய்
உணர்வுபூர்வமாய்
சொல்லப்படும்

ஆனால்

நான் செய்தேன்
என்ற கர்வமும்

புண்ய கணக்கில் வரவும்
பாபக்கணக்கில் பற்றும்
ஆகும் என்ற எண்ணமும்

இதனால் வேறு வகையில்
நமக்கு ஒரு சாதகம் கிடைக்கும்
என்ற
எதிர்பார்ப்பும் இல்லாமால்

தகுதியுடையோருக்கு
உதவி செய்ய
இறைவன் கொடுத்த
வாய்ப்பு என்போதோடு
நிறுத்திக் கொள்வோம்

## சொல்லற்ற பொழுதுகளில்

சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு

உதிர்க்கப்பட்ட
வார்த்தைகளுக்கு

செவி கொடுத்த
பேச்சுகளுக்கு

கண் பார்த்த
காட்சிகளுக்கு

சொல்லற்ற
எதிர்வினையென்றால்

வெளியே மட்டும்
அமைதி

காரணங்களாய்

கவனக்குவிப்பு
செய்ய முடியாமை
காரணமாய்
வேறு சிந்தனை

மாற்றுக்கருத்துக்கள்
சொன்னால்
ஏற்கப்படாது
ஏளனம் செய்யப்படும்
தன்னிலும் வலுவுள்ளவர்
என்பதால்

தனக்கு
துளிக்கூட
பரிச்சியம் இல்லாததால்

முன்னர் சொன்னதே
கண்டு கொள்ளப்படவில்லை
என்பதால்

முற்றிலும்
ஏற்புடையவை என்பதாலும்
மேலே சொல்ல ஒன்றும்
இல்லை என்பதாலோ

## அன்றும்... இன்றும்...

அபூர்வமாய்
வார விடுமுறையில்
இல்லம் வந்த போது

ஊரின் கதாநாயக திருவிழாவில்
ஆலயம் செல்கையில்

பின்னோக்கிய நினைவுகள்
கல்லூரி காலங்கள்
செய் பணி தேடலுக்கான பொழுதுகளில்

சில நிமிடம் மட்டும் இறைக்கு கொடுத்து
விட்டு
மெல்லிசை கச்சேரி
ஆற்றங்கரையில்
திரைகட்டி காட்டிய
திரைப்படங்கள்
வசிப்பிட தோழமைகளோடு
நகரின் பிற பகுதி நண்பர்கள் என பெரிய
கூட்டமாய் அரட்டை
எதிர் வரும் மனிதர்கள் பற்றிய விமர்சனம்
சினிமா முதல் அரசியல் வரை
அனைத்தும் தெரிந்தது போல் பேச்சு
மகளிர் கவனம் கவர
தோழமைகளின்
சப்த பேச்சு
பொறுப்புகளும்
கடமைகளும்
கவலைகளும்
இல்லாத காலம்

இன்று
நேரிடையாய்
இறை தரிசனம்
வேண்டுதல்களுக்கு
நிறைய நேரம் எடுத்து
சிக்கல்களும்
சவால்களும்
வந்தாலும்
எதிர் கொள்ளும் திறன் கொடு என்று
கேட்டு விட்டு
இல்லம் திரும்புதல்

இன்றும் அந்த நாட்களை விட
கேளிக்கைகள் அதிகம்
இருக்கின்றன

ஆனால்
அந்த தோழமைகள்
இங்கு  இப்போது இல்லை

என்றோ வருவதால்
சொந்த மண்ணின்
மனிதர்கள் எல்லாம்
புதியவர்களாய்
அறியாதவர்களாய்

இத்தோடு செய்பணி
கடமைகளும்
அதற்கான  கவலைகளும்
வேறு எதையும்
எண்ணிப்பார்க்க விடுவதில்லை

## அப்படிப் பார்க்கையில்...

இடைவெளியே
இல்லாத
புத்தியையும்
உடலையும்
கடின உழைப்பு
கேட்கின்ற
செயல்கள்
மனச்சோர்வையும்
சலிப்பையும்
கொடுக்கும் தான்

ஆனால்

பிறரோடு ஒப்பிட்டு
ஏக்கம்

இழந்தவற்றுக்கு
சோகம் கொண்டாடல்

நடக்கப்போவதற்கு
பயம் மற்றும் பதற்றம்

என்பது எல்லாம்
இதனால் நிகழாதிருப்பதால்

இதுவும் ஒரு வகையில்
பார்த்தால் நன்மையே

## மிக கவனமாய்...

வெற்றியில்
உவகை
நம்பிக்கை தாண்டி

பாராட்டால்
கர்வம்
எல்லாம் முடியும்
தெரியாதது எதுவுமில்லை
நினைத்தை முடிப்பேன்
என்பவைகளும்

தோல்வியில்
சோகம்
அவநம்பிக்கை தாண்டி

கழிவிரக்கம்
உபயோகமில்லாதவன்
திறமை அற்றவன்
எதுவுமே கிடைக்கவில்லை
என்பவைகளும்

சேர்ந்து பயணிக்க
வாய்ப்பிருப்பதால்

உணர்வுகளை
கவனமாய்

கையாள வேண்டும்...

இல்லையெனில்
ஒன்றுக்காய்
நிறைய இழக்க வேண்டி
வரும்...

## வெளியே... உள்ளே...

திறன் அறியா
இலக்குக்கும்

சரியாய்
திட்டமிடாமைக்கும

கவனக்குவிப்பு
கொடுக்கா செயலுக்கும்

தவறான
புரிதலுக்குமான

விளைவாய்
சறுக்கல் ஏற்படுகையில்

வெளியே

அவர்
இவர்
அது
இது
காரணம் என
கைகாட்டுபவராய்

உள்ளே
விருப்பு வெறுப்பின்றி
காரணம் அறிந்து
சரி செய்ய வேண்டும்

மனசாட்சியை
துணைக்கு அழைத்தால்...

## தெரிந்துமே...

நீண்ட கால
எதிர்பார்ப்பிலும்
தொடர்ந்த
கடின உழைப்பிலும்
வெற்றி பெறும்
நேரத்தில்

இதுக்கும் மேலே
என்ன வேண்டும்

ஒற்றை இலக்கு
நோக்கிய பயணத்தில்
திரும்ப திரும்ப
முயன்றும்
தோற்கையில்

இதுக்கும் மேலே
என்ன செய்ய

முன்னதில்
இன்னும் செய்ய வேண்டியது
நிறைய உள்ளது
என தெரிந்தும்
அந்த கணத்து
ஆர்ப்பாட்டமாய்

பின்னதில்
நிறைய சரி செய்ய
வேண்டியுள்ளது
தெரிந்தும்
அந்த கணத்து

புலம்பலாய்
சொந்தக்கார்களாய்...

சுய விசாரணையில்
தனக்குள் பேசுதல்

வேதனையில்
கண்களில் நீர்

உவகையிவ்
உற்சாக வார்த்தைகள்

தோல்வியில்
புலம்பல்

பொறாமையில்
ஒப்பீடு

பாராட்டில்
தோள்தட்டடல்

ஆச்சார்யத்தில்
புருவம் உயர்த்துதல்

ஆழ்ந்த யோசனையில்
வெறித்த பார்வை

## பொறுத்து...

யோசிப்பை பொறுத்து கவிதை

ஆசையை பொறுத்து
இலட்சியங்கள்

செயல்பாட்டை பொறுத்து
முடிவு

மனதை பொறுத்து
மகிழ்ச்சி...

## இதுவும் தான்...

தன் பெயர் உள்ளவரை
மற்றொருவர் அழைக்க
'திரும்பி பார்ப்பதும்'

நேரம் அறிவிக்கும் போது
'கைக்கடிகாரம் பார்ப்பதும்'

கால் தடுக்கும் போது
'அப்பா என அலறுவதும்
மட்டுமல்ல...

தனியனாய்
செயலாற்றும் போதும்
யோசிக்கும் போதும்

'இப்படி நடந்து இருக்கக்கூடாது
என்றோ

'நான் சொன்னது
சரி தானே'

## தேடி வந்த சொந்தம்

செய்பணி
குடும்ப கடமைகள்முடித்து
உறக்கத்துக்குமுன்னான
பொழுதுகளில்
தன் விருப்பம்
நேற்றைய உண்மைகள்
இன்றைய யதார்த்தங்கள்
நாளைய எதிர்பார்ப்புகள்
ஆகியவற்றுக்கு
புத்தியும் மனதும்
மௌன பேச்சுகளுக்கு

தேடி வந்த சொந்தமாய்
தனிமை

என்று புத்தி சொன்னதை
உதட்டு வார்த்தையால்
முணு முணுப்பதும்

'அனிச்சை' தான்

## என்ன என்ன வார்த்தைகளோ...

நீங்க சொன்னா
சரி தான்

உங்களைப்பற்றி
தெரியாதா

நீங்க மனசு
வைச்சா நடக்கும்

முன்னாடி இது மாதிரி
உதவி செய்து இருக்கீங்க

என காரியம்
ஆக வேண்டிய காலங்களில்

எப்பப்பாரு
நடக்காமைக்கு காரணங்கள்

முடிக்கணும்கிற
எண்ணமே இல்லே

செய்கின்ற வேலையில்
கவனம் இல்லை

பார்க்கின்ற பணியின்
முக்கியத்துவம் தெரியலை

என உதவி தேவைப்படா
பொழுதுகளில்

## அதற்காக மட்டுமா?

சேமிப்போம்
'பெற்ற வெற்றியின்'
'கிடைத்த பாராட்டின்'
'சுய திருப்தியின்'
நினைவுகளை

அடுத்த கட்ட நகர்வுகளுக்கு மட்டுமா?
இல்லை

செயல் தோல்வியின் போது
'நம்பிக்கை இழக்காமால்
மீண்டும் முயற்சிக்க...

அங்கே...

பின்புலம் இல்லாமால்
சுழியத்தில் தொடங்கி
வாழ்வின் உச்சம் தொட
பயணப்படுகின்ற பொழுதுகளில்

தான் செய்யப்போகின்ற
உதவிக்கு
பிரதிபலன் கிடைக்காது
என அறிந்தும்
பெறுபவர் தகுதி அறிந்து
செய்யப்படும் கணங்களில்

தானும் போட்டியாளராய்
இருந்த போதிலும்
தன்னை விட
திறமையானவர்

வெற்றி காணுகின்ற
போது
உள்ளார்ந்த பாராட்டை
சொல்கின்ற நேரங்களில்

சிறப்பானவைகளின்
அணிவகுப்பு

## அந்த குரல்

ஒரு செயல்
நினைத்தப்படி
முடித்த மகிழ்ச்சியில்
அடுத்ததை உடனே
வா என அழைப்பதும்

பிடிக்காத செயலுக்கும்
அவமான வசை மொழிக்கும்
ஏளன வார்த்தைகளுக்கும்
செவி கொடுக்கையில்
பொறுமை என சொல்வதும்

பதற்ற
அவசர பொழுதுகளில்
நிதானம் என
நினைப்பதும்

உவகையின்
உச்ச பொழுதுகளில்
உணர்வை தாமதம் செய்
என எடுத்துரைப்பதும்

எந்த குரல்

மனதின் மௌன குரல்
நீங்க வேற...

இருவரின் முடிவுக்கான
தீவிர பேச்சுக்கிடையில்

மூன்றாம் மனிதர்
நுழைகையில் வார்த்தையாய்

## முன்னே சொன்னது

நான் எல்லாம்
உன் வயசிலே
இருந்த போது
பாதி உண்மையும்
மீதி கற்பனைமாய்
நினைவுகளே
பகிர்கின்ற போது

முன்பு
செவி கொடுத்தவர்
வயதில் இதையே
கேட்ட போது
இவர் கதை நமக்கு
எதற்கு
உள்ளுக்குள்ளே
பேசிக்கொண்டது
கர்ம சிரத்தையாய்
நினைவில்

இது காலம்
காலமாய்
தலைமுறை தலைமறையாய்
தொடரத்தான் செய்யும்
என கள யதார்த்தம்
உணர்தலோட

## இருவராய்...

எண்ணமோ
செயலோ
ஆரம்பிக்கும்

முன்னே…

இலக்கு சரி தானா?
காரணம் உள்ளதா?
காரியாமாற்றும் திறன் உள்ளதா?
யுக்தி பலன் அளிக்குமா?
உரிய காலம் தானா?
வேண்டிய முடிவை
நோக்கி பயணம் தானா?

இப்படி
மனதுக்குள்
இருவராய் பேசிக்கொண்ட பின்
நடந்தால்
வெற்றி தான்..

## அது எல்லாம் இருந்தால்….

நீ
இருந்தால் தான்
நிகழ்காலம்
உற்சாகமாகும்
எதிர்காலம்
சுவாரஸ்யப்படும்
வாழ்க்கை
அர்த்தப்படும்
எதிர்பார்ப்பு

என்ன ஒன்று
தகுதி அறிந்து
திறன் உணர்ந்து
உழைக்கும் காலம் புரிந்து
இதற்கு முத்தாய்பாய்
முடிவுகள்
ஏமாற்றம் அளித்தாலும்

மாற்றுத்திட்டமும்
மீள முடியும்
என்ற நம்பிக்கையும்
வேண்டும்

அப்பத்தான்
அடுத்த கட்ட நகர்வு
சாத்தியப்படும்

## வேறு பார்வையில்

முதல் முயற்சியில்
இலக்கை அடைவதும்
வெற்றி காண்பதும்

உவகை கொடுப்பதும்
பெரிய இலக்குகளுக்கு
அடித்தளம் அமைப்பதும்
அங்கீகாரம் கிடைப்பதும்
உண்மை தான்

ஆனால் சில முயற்சிகளுக்குப்பின்
இலக்கை அடைவதும்
ஒன்றும் குறைந்தது இல்லை

பெரும் பாட்டுக்குப்பின்
வருவதால்
கிடைக்கும் கணத்தில்
மகிழ்ச்சி மிகுதியும்
தக்க வைத்துக்கொள்ள
பொறுப்பும்
பயணக்காலத்தில்
நிறைய அனுபவங்கள்
கிடைப்பதால்

## பின்னால்…

விசாரிப்புகளற்ற
ஒப்புதலும்
அங்கீகாரமும்

வேண்டுமெனில்

அதன் பின்னால்
கடந்த கால கடின உழைப்பும்
மிளிரிடும் திறமையும்
அதன் விளைவாய்
தொடர் வெற்றியும்
அது கொடுத்த
நம்பிக்கையும்
நடந்திருக்க வேண்டும்...

## அந்த உணர்வுகள்

தேவைக்கான
துல்லிய இலக்கும்

செயல் முடித்த
தன்திருப்தியும்

நிகழ்ந்த பின்
பெரிய பாதிப்பை
ஏற்படுத்துவதில்லை

ஆனால்

புரிந்து கொள்ளா
விமர்சனமும்

முழுதும்
அறியா விமர்சனமும்

முன்னர் கொண்ட
வெறுப்பால்
சொல்லப்பட விமர்சனமும்

மனதை தாக்கி
நிகழும் கணத்தையும்
தாண்டி
அடங்க மறுக்கும்
உணர்வுகளாய்
துக்க உணர்வுகளாய்
தூக்க இரவுகளை
களவாடி

## உண்டா?

வெற்றி கிடைத்த பின்
உள்ளுக்குள் மட்டும்
உவகை கொண்டு
அடுத்த கட்ட நகர்வுக்கு
தயாரானது உண்டா

எதிர் மனிதர்
பேசும் போது
கவனச்சிதறல்
இல்லாமால்
உள் வாங்கும்
பழக்கம் உண்டா?

உணவருந்துகையில்
மற்றவை பற்றி
யோசிக்காமால்
ரசித்து ருசித்து
உண்ணும்
பழக்கம் உண்டா?

ஒரு செயல் பயணத்தில்
வேறு சிந்தனைகளற்று
அதில் மட்டும்
கவனம் செலுத்தும்
பழக்கம் உண்டா?

ஆம் எனில்
நிகழ்காலத்தில்

இருக்கின்றிர்கள்..

## எல்லாத்துக்கும்...

அனைத்து
யோசிப்புக்களும்
எண்ணங்களுக்கும்
செயல்பாட்டிற்கும்
முடிவுக்கும்
யூகத்திற்கும்

மற்றவர்களின்
அங்கீகாரமாய்
பாராட்டையும்
விமர்சனமாய்
வசை மொழியையும்
கேள்விகளுக்கான
பதற்றத்தையும்
பார்த்துக்கொண்டே
இருந்தால

நமக்கான
நம்மின் மீதான
நம்பிக்கையும்
தனித்தன்மையும்
சுயமும்
எங்கே போகும்?

— *A.S. சுந்தரராஜன்,*

மானாமதுரை.



ஓவியம்:

**மா. நிரல்யா,**

மூன்றாம் வகுப்பு,

சிங்கப்பூர்.



# வேட்கை தீரா நதி

தேக்கி வைத்த பாத்திரங்கள்
உடைந்து கிடக்க,
கடல் தேடி அலையும்
வேட்கை தீராதவர்கள்...

அள்ளிப் பருகும் போதெல்லாம்
அதிகரிக்கும் தாகமது;
கையில் கிடைத்தும்
கானல் நீராய் தப்பிக்கும்
மாயமது!"

உலகமே வெறுமையால்
நிறைந்திருக்கையில்,
தன் ஆன்மாவின் ஓட்டையை
அடைக்க முயலும்
பேராவல் கொண்டவர்கள்...

வறண்ட நிலத்தின்
முதல் மழையென,
தீராத தாகத்தோடு
தேடியலையும் தீரர்கள்.

பருகப்பருக குறையாத
விடாயென அது மாற,
கொடுத்தே தீராத
வள்ளல்களாய்...
குடித்தே மாளாத
ஏழைகளாய்...
காலத்தின் விளிம்பில்
காத்து நிற்கிறார்கள்!"

தருவதிலும் பெறுவதிலும்
கணக்குப் பார்க்கத் தெரியாத
பித்தர்களாய் -
அவர்கள்
அலைந்து கொண்டிருக்கிறார்கள்!"

கிடைக்காதவர்களாகத்தான்
இருக்கக்கூடும்
அன்பை மாந்தி மாந்தி
குடிப்பவர்கள்!

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.



**எஸ். நிகிதா,**
வகுப்பு 7, ஸ்ரீ பாரதி வித்யாலயா,
மன்னார்குடி.

# இழுவை தொடர் வண்டிக்குள்

மலை ஏறும்
மகளின் உற்சாகத்தில்
ஒளிந்து கிடக்கிறது ஒட்டுமொத்த
பழநியின்
உயிர் தரிசனம்.
கடவுளை வணங்கி வெளிவந்தவள்
விளம்புகிறாள்
ஆண்டியாய் நிற்பவனிடம் ஆசைகள்
கூட்டுகிறோம் என.

## நெடுஞ்சாலை பரபரப்பில் விரையும் வாகனங்களுக்குள் அலாரம் எழுப்பியபடி

நுழைந்து ஊடுருவி வரும் அபாய
வண்டியில்
ஓடுகிறது உயிர்த்துடிப்பு.
பெரு விபத்தின் குருதித்தடத்தில்
பெருக்கெடுக்கும் சுயமிகளை காற்றில்
தவழவிட்டபடி
கதறும் அலைபேசிக்குள் அழுவதா
சிரிப்பதா என குழம்புகிறது மனித
நேயம்.

## பெருமழையின்

சிறு பிள்ளையென
தலை நனைத்தும்
கால்நனைக்கா
தூறலில் நடக்கிறேன் நனையாத
நிலத்தினில் நனையும் மகிழ்வில்
தலைகாட்டும் வெயிலை
எப்படி ஆற்றப்படுத்த?

## நெடுஞ்சாலையின்

ஈரத்தை உறிஞ்சியபடி
விரையும் வாகனங்களுக்கு மத்தியில்
பெய்தும் பெய்யாமலும் குழம்பித்
தவிக்கும்
மழையைப் பார்த்து
கிளைக் கைகளை ஆட்டி
கேலி பேசுகிறது மரம்.
விரையும் வாகனங்களை விலக்கி
பூவின் இதழ்களுக்குள்
புயலெனப் பொழிகிறது மழை. வானத்
தீண்டல் தீர்ந்த பின்னும் கண்ணீர்
வடிக்கிறது
மரத்தின் கிளைகள்.

## வெயிலின் பூ

புன்னகைக்கும் போதே
வந்து விழுகிறது
வானத்தின் வியர்வை என மழை.
எச்சரிக்கை இல்லா
மர்மப் படத்தின்
இறுதிக்காட்சி போல
ஒதுங்க இடமற்ற பெருவெளியில்
ஓடிக் கொண்டிருக்கும் தலைகளைத்
தாண்டி
காகிதக் கப்பலை கையில் ஏந்தியபடி
நனைய வரும்
சிறுமியைக் கண்டு
துள்ளாட்டம் போடுகிறது மழை. இந்த
நாளின் பெருஞ்சுமையை இறக்கி வைத்த
நிம்மதியில் இளைப்பாறுகிறது
காலக்கவிதை.

## நெருக்கியடித்த

கடன்களின் நீள்கரங்கள் தின்று செரித்த

வயலுக்குள்
இரை தேடிக் கொண்டிருந்த நாரைகளை
வேடிக்கை பார்த்தபடி
களை பறிக்கிறாள்
நேற்று வரை
மாடியிலிருந்தவள்.

- இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# செயல் இழந்த கழிவறை மின்விளக்கு...

பொசுங்கல் வாடையோடு
பட்டென உயிர் விட்ட
மாவரைக்கும் இயந்திரம்•••

தாத்தாவின் உடைந்த
மூக்கு கண்ணாடி•••

இயங்க மறுத்து
அழுத்தமாய் நிற்கும்
அக்காவின் அலைபேசி•••

எல்லா பழுதுகளையும்
சரிசெய்து விட்டேன் என
வந்து நிற்கிறார் அப்பா•••

நெடுவருடமாய் அவரைச்
சுமந்து பறக்கும் வண்டியில்
மாறாமல் அப்படியே
தொங்கிக் கொண்டிருக்கிறது•••

பிரசவித்த வயிற்றின்
பிள்ளைக் கோடுகளைப் போல
தலைகவசத்தில்•••
பரவிக்கிடக்கும் கீறல்கள்!

## அடிவயிறு இழுத்து

பிடிக்கும்படியாய்
இரவெல்லாம் இருமி இருமி
தீக்கனலாய் விரவுகிறது
தொண்டையில் எரிச்சல்

விடாமல் தொடர்கிற
குறட்டைச் சத்தத்தில்
இடிப்பட்டுத் தீராமல்
எனக்கு மட்டும்
நீண்டிருக்கிறது இரவு!

ஆனால்...
இருவரையும் ஒரே நேரத்தில்
தட்டியெழுப்புது - விடியல்.

## அதே இடம்...

அதே முகங்கள்...
அதே வேலை...
புளித்த வாழ்க்கையென
ருசிக்க மறுக்கிறது மனநாவு!

தொட்டிச் செடியில்
சிரித்துக் கொண்டே
பூக்கிறது பூ!

— பி. ஹேமா,
முசிறி. 7845843650

# மஞ்சள் கோடு – சிறுகதை

சின்றிக்கு தெரியும்.. மஞ்சள் விளக்கின் மகிமை.

மஞ்சள் விழுந்ததும் வேகமெடுக்கும் வீணர்களின் மத்தியில் வேகம் குறைத்து விதி செய்பவன் சின்றி. அதோ தெரிந்து விட்டது. மஞ்சளின் மகிமை. மெல்ல வண்டியை நிறுத்தும் நிலைக்கு வந்திருந்தான். எங்கிருந்தோ வந்தான்... எமன் என்று தான் சொல்ல வேண்டும்.

சரசரவென உள்ளே நுழைந்து ஊசி முனைக்குள் உருவாஞ்சுருக்கு போட்டு விட்டு வளைந்து நெளிந்து மஞ்சளை குழப்பி... வாகாக பூசி எழுந்து... சிவப்பு விழுந்த பிறகும் சிக்னல் தாண்டி விட்டான். படுபாவி அவன் மட்டும் போனால் பரவாயில்லை.

அவனுக்கு முன் நிற்க போகும் நேரத்தில் சமநிலைக்கு தடுமாறிக்கொண்டிருந்த சின்றியையும் சேர்த்து இழுத்து சென்று விட்டான். பின்னால் அத்தனை வேகத்தில் ஒரு வாகனம் வருகையில்... முன் இருப்பவன் சட்டென வண்டியை நிறுத்த முடியாது. நிறுத்திய காட்சிகளில் எல்லாம் அப்பளமாய் சுருண்ட வீடியோக்கள் அவன் கண் முன்னால் நொடிக்கும் குறைவாக வந்து நொறுங்க... மூளை தன் குளறுபடியை கனகச்சிதமான செய்து விட்டது.

எமன் எகிறி விட்டான். சின்றி குறுகி விட்டான்.

பிராந்தி கடை அங்க இருக்குனு தெரிஞ்சும்... பிராந்தி கடைக்கு முன்னால.. பார்க்கிங்க்கு இடம் இருக்குன்னு தெரிஞ்சும்... அந்த வழி முக்குல மூக்கு வேர்க்க மறைந்து நிற்பார்களே காவல் தொப்பிகள்... அவர்கள் இப்போதும் அப்படித்தான் சற்று உள் வாங்கிய வழி வயிற்றுக்குள் ஒளிந்து நின்றிருந்தார்கள். மயிரே போச்சுன்னு போனவனை விட்டு விட்டார்கள். மண்டை தப்பிச்சுதுனு தடுமாறியவனை நோக்கி கையை நீட்டினார்கள்.

"போக்குவரத்து விதிமீறல்... இப்டி வா... இப்பிடி வா.. சொன்னா தான் இறங்குவியா.." இன்னும் என்னென்னவோ வார்த்தைகள். லத்தி எறிந்து... கனத்த மீசைக்குள் இருந்து நாக்கை துருத்தின.

விதிமீறலா... வார்த்தையே சுட்டது சின்றியை. சார் நான் நிக்கதான் பார்த்தேன்.. பின்னால் வந்தவன்... ம்கூம்... அவர் பில் அடித்து விட்டார். கையளவு வெள்ளை இயந்திரத்தில் ஒன்று இப்போது வந்திருக்கிறது. அதைக்கொண்டு உணவகத்தில் சாப்பிட்டதற்கு தொகை அச்சிடுவதை போல வண்டி எண் மீது காட்டி அப்படி இப்படி என்று தொழில்நுட்ப வேலைப்பாடு.. பார்க்க ஆசையாக தான் இருக்கிறது. தொழில்நுட்பம்...

பொத்தான்களில் பரவசம் ஊட்ட....
பாதிக்கப்பட்டவன் தான் பட்டன்
அவிழ்ந்து நிற்கிறான்.

யாரை நொந்து கொள்வது... ஐநூறு ரூபாய் சாதாரணம் இல்லையே. ஒருநாள் சம்பளமே எழுநூறு தான். இதில் ஐநூற இங்க குடுத்துட்டு வீட்டுக்கு எதை குடுக்கறது.

சார்.. நான் ஒன்னும் பண்ணல சார். எப்பவும் சிக்னல கரெக்ட்டா மதிக்கிறவன் சார். அவன் பின்னால் முட்ற மாறி வந்ததுல தான் சார் பயந்து வண்டி சிக்னல் தாண்டிருச்சு. அவன் அங்கருந்தே அப்பிடி தான் சார் ஓட்டிட்டு வந்தான்.. முன்ன போக்குவரத்து விளக்கில் கூட நிக்கல. அவன் வாகன சத்தம் கூட லாரிக்கு வெச்சிருக்கிற சத்தம் மாறி தான் சார் மாட்டிருக்கான்... கண்ணாடியை கூட மான் கொம்பு மாறி திருப்பி விட்ருக்கான் ஐயா.. தலைக்கவசம் போடல... தொப்பி தான் போட்ருந்தான் ஐயா... காதுல கம்பி மாட்டி இருந்தான்.. அலைபேசியில் பேசுனானா... பாட்டு கேட்டானா தெரியல ஐயா...

எதெல்லாம் சொன்னான்.. எதெல்லாம் முனகினான்.. எதெல்லாம் சொல்ல நினைத்தான்... ஒன்றும் விளங்கவில்லை.

மக்கள் அவதி அவதியாக போவதும் வருவதுமாக இருந்த அந்த சாலை ஒரு மிருகக் காட்சி சாலை போலவே இருந்தது. காவல் தொப்பிகள் முகத்தையே பார்க்க மாட்டேன் என்கிறார்கள். அவர்கள் வண்டிகளை மட்டுமே வகை வகையாய் தேடுகிறார்கள். சின்றியோடு நின்ற நாலைந்து வண்டிகளில் பல்வரிசை.. முககட்டு... உடற்கட்டு என்று தேடிக் கொண்டிருக்க.. சின்றிக்கு அடி வயிறு கலங்க கண்களில் அழுத்தம் ததும்பியது. ஐநூறு ரூபாயை பிடுங்குகிறார்கள்... என்ன செய்வது. உறுத்தல் வேறு. செய்யாத தவறுக்கு நான் எதுக்கு காசு கட்டணும். கொலைவெறி உள்ளே அந்த தொப்பிக்காரன் மீது கொந்தளித்தது. தப்பு பண்றவன்லாம் தப்பிச்சிக்கறான். ஒதுக்கப்படறவன் எல்லாம் மாட்டிக்கறான். யாருக்கும் அவன் கதையை கேட்க நேரம் இல்லை. அவனுக்கும் யாரிடம் தன் கதையை சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை.

மனதுக்குள் சாபமிட்டான். அப்டியே லாரில அடிபட்டு இன்நேரம் செத்துருப்படா.. இல்லனா ஒரு காலாவது போயிருக்கும். வயிறு எரிய சொன்னான். உடல் எரிய சாரத்தில் தொங்கி சுண்ணாம்பு அடித்து வாங்கிய காசு இது.

இயலாமை.. நின்று நின்று பார்த்து விட்டு காசை எடுத்து நீட்டியது. சிக்காதவன் தனக்கு நல்ல நாளை உருவாக்கி கொள்கிறான். சிக்கினவன் காவல் தொப்பிகளுக்கு நல்ல நாளை உருவாக்கி தருகிறான். எது எவன் கைல இங்க இருக்கு. ஒன்னும் புரியல. அழாத

குறையாக தலைக்கவசத்தை தலையில் கவிழ்த்து கொண்டு வண்டியை எடுத்தான். வண்டிக்கே காய்ச்சல் வந்தது போல தான் இருந்தது.

இரண்டாம் வளைவு எதிர் கொள்கையில்... எதிரே ஒரு ஆம்புலன்ஸ் சைரன் சகிதம் எகிறி குதித்து சென்று கொண்டிருந்தது. ஏற்கனவே மெதுவாக சென்று கொண்டிருக்கும் பைக்கை இன்னும் மெல்லமாக்கி தலையை மட்டும் திருப்பி பார்த்தான். பல யோசனையும் ஒரே இடத்தில் சுழன்றன.

இரண்டு வளைவு தாண்டி.. மூன்றாம் வளைவில் ஆங்காங்கே நின்றிருந்த கண்களின் பார்வை... சற்று முன் அங்கே நிகழ்ந்த விபத்தில் இருந்து மீண்டு கொண்டிருப்பதை உணர முடிந்தது. என்னாச்சு.. என்று கண்கள் சுருக்கி பார்த்தான். வண்டியை ஓரங்கட்டி நிறுத்தி விட்டு... சுற்றும் முற்றும் அலசினான். உள்ளூர புறங்கையில் பிரம்படி வாங்கிய ஒரு சிறுவனின் விளைவு... அவன் உடல் மொழியில்.

விபத்து நடந்து முடிந்த இடத்தில் இருந்த மிச்சங்கள்... அவை மனிதர்களின் படபடப்பும் பார்வையும்... பரிதாபமும் ஆச்சரியமும்... அனுதாபமும்... கூட சாலையில் போட்டிருந்த கோடுகளும்... விழுந்து புரண்டிருந்த புண்களும்... சரிந்து எழுந்திருந்த சிராய்ப்புகளும். அவனுக்கு ஓரளவு புரிந்து விட்டது.

ஒருவேளை அவனா இருக்குமோ.... யோசிக்கும் போதே மின் கம்பத்தில் முட்டி சரிந்து நொறுங்கி கிடந்த அந்த பைக் அவன் கண்களில் விழுந்தது. சாலையில் ஒரு பேயை போல சீறிக்கொண்டு... மற்றவர்களை ஒரு கணம் மண்டைக்குள் வெடி வைத்து நகர்ந்த அதே பைக். அவனுக்கு நிலை கொள்ளாத மனநிலை. கொடுத்த சாபம் பலித்து விட்டதோ. சுருங்கிய கண்களில் கூர்மை. மூச்சில் சூடேற அவன் மெல்ல அருகே இருந்த தேநீர் பெட்டி கடைக்கு சென்றான்.

தேநீர் சொல்வது போல "என்...னாச்சு....?" என்றான்.

"விபத்து.. வெறி புடிச்சவன் மாதிரி ஓட்டிட்டு வந்தா இப்பிடி தான்...!" தேநீரை கொடுத்து விட்டு தன் கருத்தையும் திணித்து விட்டு சென்றார் சப்ளையர்.

கல்லாவில் அமர்ந்திருந்தவரை பார்த்துக் கொண்டே தேநீரை குடித்த சின்றி... நொறுங்கிக் கிடந்த பைக்கையே வெறிக்க பார்த்தான். விபத்து நடந்த இடத்தில் அறிமுகமற்ற முகங்கள் கூட தானாக பேசி உச்சு கொட்டும். அப்படித்தான்... கல்லாக்காரர் முனங்கினார். அது அவருக்கு திருப்தியா துக்கமா... தெரியவில்லை.

அத்தனை பெரிய விபத்து. ஆனாலும் இன்னைக்கு கடவுள் அவன் பக்கம் இருந்திருக்கான்.

குடிப்பதை நிறுத்தி விட்டு சட்டென அவர் முகத்தை கூர்ந்து பார்த்தான் சின்றி.

பார்த்தபடியே...மெல்ல... "லாரியா...?" என்று எடுத்து குடுத்தான்.

லாரின்னா இந்நேரம் சுடுகாட்டுக்கு போயிருப்பான். இது நாய். அதனால தப்பிச்சிட்டான்.

நாயா...?! சின்றியின் கண்கள் இன்னும் விரிந்தன. அதில் என்னவோ குறைந்திருந்தது.

நாய் குறுக்க வந்து விழுந்து எந்திரிச்சு ஓடிருச்சு. இவன் கம்பத்துல மோதி சரிஞ்சிட்டான்.

தேநீரின் சுவை சட்டென சுடுதண்ணி போல உணர்ந்தான். அவரையே பார்த்தான். சட்டென நிரம்பிய போதாமை தேநீர் குவளையை கீழே இறக்கியது.

எதையுமே ஒரு கதை போல சொல்லி பழகியவர் போல கல்லாக்காரரர். இன்னும் முடியவில்லை என்பதாக தொடர்ந்தார்.

ஆனா விதி யாரை விட்டுச்சு..

பார்வையை மீண்டும் அவர் பக்கம் வேகமாய் திருப்பினான். என்ன சொல்ல போகிறானோ என்ற ஆவல் சின்றியின் நெற்றியில். அவன் தாடி முகத்தில் தாக வட்டம். அவருக்கும் சொன்னால் தான் நிம்மதி போல. சொன்னார்.

அவ்ளோ வேகத்துல விழுந்து... அங்க பாருங்க... வண்டி நொறுங்கி கூறு போட்டு கிடக்கு. ஆனா அவனுக்கு ஒரு அடி இல்ல.

தேநீரை அப்படியே அருகில் இருந்த திண்டில் வைத்து விட்டு பொதுவாக ரோட்டை ஒரு பேனர் போல பார்த்தான் சின்றி. சப்பென்று இருந்தது இத்தனை நேரம் குடித்த தேநீர்.

ஒரு இறுதிக்காட்சி திருப்பத்தை சொல்கிறவர் போல கண்ணாடியை சரி செய்தபடியே கல்லாக்காரரர் தொடர்ந்தார். திரும்பிய கண்களை அவர் மீது இமைக்காமல் கொட்டினான் சின்றி.

நாய் வால நசுக்குனா விடுமா... தொடைல கொத்து கறியை எடுத்துருச்சு. விபத்துன்னு வந்த அவசர ஊர்தியை தலைல அடிச்சுகிட்டு தூக்கிட்டு போயிருக்கு...

அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

சின்றி இன்னொரு தேநீர் சொன்னான். கூடவே வர்க்கி வாங்கி தேநீரில் முக்கி திங்க வேண்டும் போல இருந்தது.

—

கவிஜி

# துளி நெருப்பு

தோன்றும் போதே
தோண்டல் நலம்
ஒரு புள்ளியே போதும்
பற்றி எரியும் பக்கத்துக்கு
துளி நெருப்பிலும்
ஜோதி ஏற்றலாம்
குறிப்பெடுத்து
குணநலம் பார்த்து
ஆகாது அற்புதம்
முதல் தட்டுலேயே
திறந்து விடு
நொடிநேர தெறிப்பு
நோம்பி நாள் பார்த்து வராது
நல்ல மழைக்கு காத்திருந்தால்
மண்வாசனை பிடிபடுமா
அதுவாக அவிழ்கையில்
அதுவாகி அணைத்துக்கொள்
நினைக்க நினைக்கவே
நேர் நில்
சேர்த்து வைத்து ஆக்கி வைக்க
இது படையல் அல்ல
படைப்பு

## கண்ணாடிப் புன்னகை

வண்டியின் முதுகு முழுக்க
நொறுக்குகள்
வகை வகையான பொட்டலங்கள்
நூல் கோர்த்த
அடுக்கு கூடிய அழகு
முதுகில் தொங்கும்
சிறு பிள்ளைகள் போல
வகை வகையாய்
வண்ண பாக்கெட்டுகள்
முதுகு நீட்டும் பூங்கொத்து
வா வா என்கிறது
பின்னாலேயே செல்கிறேன்.

கண்ணாடி சரி பார்த்து
போய்க்கொண்டே இருக்கிறான்
காற்றில் கைகளை ஆட்டி
சட்டைப்பைக்குள் இருந்து
புறாவை எடுப்பது போல
ஒலிப்பானற்ற
ஓர் ஒய்ந்த வேகத்தில்
பின்னால் வருகிற என்னை
கண்ணாடியில் பார்த்து பார்த்தே
சிறுவனாக்கி விட்டான்
மெல்ல புன்னகைக்கிறேன்
தோகை விரிந்த
நொறுக்கு மயிலென
படக்கென
என்னைப் பார்த்து விட்டு
திரும்பிக் கொள்கிறான்
இப்போது
அந்தத் தின்பொறியாளன்
கண்ணாடியிலும்
சிறு புன்னகை...!

## பூனைக்குள் இருக்கும் யானை

பூனையின் கண்களில்
பச்சை விளக்கு
அதன் தோள்களில்
புலியின் தாளம்

காட்டாறாய் நீளும் வீதியில்
ஒரு நன்னடைக்கு
போராடும் அதன் பொழுதுகள்
நாய்களின்
ஒலிப்பான்களிடமிருந்து
குட்டிகளைக் காக்கும்
காத்திரம் அதன் காதுகளில்
நிழல் தேடி பதுங்கிக் கொள்ளும்
அதன் கால்களில்
வனத்தின் நினைப்பு
ஆதியிலிருந்தே
அதன் மொழி மியாவ்தானா
பெரும் பசி நேரத்தில்
சிறுகுழந்தை வீறிடலும் உண்டு
தொடர் கவனிப்பில்
பூனை நம்மோடு பேசுகிறது
அதே சமயத்தில்
எதையும் எதிர்க்கும் வல்லமையோடு
பூனைக்குள் இருக்கும் யானை
ஓர் அமைதிக்கும் காத்திருக்கிறது....!

## கெடாக்காரனின் கருணை மனு

நூதனமாய் இறைஞ்சும்
அந்த விழிகளுக்கு
வலி உண்டு

நேர்ந்து விட்ட
ஆடு என்பதெல்லாம்
என்ன மொழி

பலி தரும் செழுமை
காலைச் சுற்றும் பாவங்கள்
அறியாயோ

துயர கீதங்களை
அடித் தொண்டை இசைப்பது
இம்சை

காண காண
ஒரு தொலைதலை
நிகழ்த்த தான் வேண்டுமா

கருணையற்ற மனமெல்லாம்
கெடாவெட்டில்
விளைகின்றனவோ

முன்னிரவு நிலவொளியில்
பார்த்ததுண்டா
அதன் தன்னிறையா
தாவல் இருட்டை

வேட்டை வேண்டுதல்கள்
மனம் மாறட்டும்

வயதானவன் பேசுகிறேன்
பிரார்த்தனைகளை
நகர்த்தி விட்டு
கடவுளவனும் பேசட்டும்

## நேர் எதிர்

தோல்வியை
நுணுக்கி நுணுக்கி பேச
வெறுமையை
வெற்றிலையாக மெல்ல
ஏமாற்றத்தை
எகிறி எகிறி பிடிக்க
துயரத்தை
தோளுக்கேற்றி தவிக்க
சிரித்தபடியே அழ
வெறித்தபடியே திரிய

போதாமைப் படியில்
உருண்டபடியே விழ
முக்கியமாக
காதலின் தோல்வியை
கட்டிக்கொண்டே உழல
ஒன்றுக்கும் வாய்க்கவில்லை
அத்தனைக்கும்
நேர் எதிராக இவ்வாழ்வு

## தன்னோவியம்

எப்போதாவது
விரல்களை மடக்கி
நகங்களைப் பார்ப்பது
நமட்டை மடக்கி மீசை கடிப்பது
அவ்வப்போது மீசை முறுக்குவது
தலை கோதுவது
சொடுக்கெடுப்பது
தாடி தடவுவது
சட்டைக்கையை சுருட்டி விடுவது
காலரை பின்னிழுத்து விடுவது
பேண்ட் பையில்
கை விட்டுக் கொள்வது
யார் அழைப்புக்கும்
தன்னை திரும்பச் செய்வது
தனித்திருப்பவனின் தன்னோவியம்
முழுமைக்கு
முயன்று கொண்டே இருக்கிறது.

— கவிஜி

---

# மழைன்னு என்னப்பா

என கேட்ட மகளிடம்
வானம் தன் துன்பத்தை தாங்க முடியாம
அழுகுதும்மா
என சொல்லியிருந்தேன்...

என்றோ ஒரு நாள்,
கடந்த சில நாட்களாக ஓயாத
அடைமழை,
வீட்டுக்கும் வாசலுக்கும் பல முறை
நடந்து கொண்டிருந்தவள்...

என்னப்பா மழைக்கு துன்பம்
அதிகமாயிடுச்சாப்பா
ரொம்ப அழுகுதே,
அதுக்கு ஆறுதல் சொல்லி அழுகைய
நிறுத்துங்கப்பா...

பாவமா இருக்கு என சொல்லிக்
கொண்டிருக்கிறாள்•••
சோகமான முகத்துடன் !

- மு. முபாரக்,
திருச்சி.



# அம்மாவின் மூன்று பெயர்கள்

அம்மாவிற்கு மாமியார்
அவளது அம்மம்மா தான்
மாமனாரோ தாய்வழி தாத்தா

அம்மாவின் அப்பா
அவளது அம்மம்மாவின் தம்பி
அவர் கல்யாணம் கட்டிக்கொண்டது
தனது அக்காவின் மூத்த மகளை

பெண் எடுத்து
பெண் கொடுத்து
பெண் எடுத்த
தொடர்கதை
அம்மாவோடு நிறைந்தது

அதன்பின்பு
கொடுக்கல்
வாங்கல் இல்லை

அம்மாவின் ஜாதகத்தில்
அவள் பெயர்
பூமாரி அம்மாள்

திருமண அழைப்பிதழில்
பூங்கொடி

இப்போது வந்த
வாக்குச்சாவடி சீட்டில்
பூக்கொடி

பூமாரியம்மாளை விட
பூக்கொடியை விட
பூங்கொடி
மென்மையானது

ஙப்போல் வளை
என்ற ஔவையின்
ஆத்திச்சூடி போல்
'பூங்கொடி' அம்மாவும்
சுற்றத்தை அரவணைத்து
வாழ்கிறாள்

ங மட்டும்
புழங்கும் சொற்களில்
இருந்துகொண்டு
ங வரிசையின்
பன்னிரு உயிர்மெய்களைக்
காப்பது போல்
குடும்பத்தைக் காக்கிறாள்.

- மு.ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102

# வாதை

ஊருக்கு ஒதுக்குப்புறத்தில்
வயதான இரயில் நிலையம்
தொலை தூரத்திலிருந்து
எப்போதாவது வரும் இரயில்
கையசைத்து வழியனுப்பும்
இரயில் நிலையத்தின்
பார்வை எப்பொழுதும்
பாதை மீது தான்

-- பா. சிவகுமார்

# பிறழ்ந்திடும் நேசம்

தேடப்படுவதெல்லாம் கிடைப்பதில்லை

கிடைத்தவையெல்லாம்
தேடப்படுவதில்லை

தேடியவை கிடைக்கையிலே
தேவைகள் இருப்பதில்லை

தொலைத்தன தேடுகையில்
இருப்பவையோ தெரிவதில்லை

நேசித்திடவே மனிதனுக்கு
நேரமோ கிடைப்பதில்லை

நேரமது கிடைக்கையிலே
நேசித்தவரைக் காணவில்லை

காலம் நடத்தும் நாடகத்தில்
கருணையோ துளியுமில்லை.

கதியில் சுழலும் மானுடத்தில்
கடுகளவேனும் நேசமில்லை

இருப்பதைக் கண்டு கொள்ளாமல்
இல்லாததை நினைத்தே வாடுகிறோம்!

நிழலைத் தேடிய ஓட்டத்தில்
உண்மையை தொலைத்து நிற்கின்றோம்.

புதிராய் நீளும் வாழ்வினிலே
பிறழ்ந்திடுதே நேசம் சுயநலமாய்

சூழ்ந்திருக்கும் உறவுகளோடு
தனித்தே இருக்கும் மனிதமே..!!!

# போர்வை

உன்னைக் காதலிக்க
போதுமானதாக
இருக்கிறது

என்னை காப்பாற்றிக் கொள்ளும்
ஆயுதமாக இருக்கிறது

உயிர் வாழ வைக்கும்
காற்றாகவும் மாறி இருக்கிறது

பெரும்பாலான வேளைகளில்
என் பிணி தீர்க்கும் பானமாக இருக்கிறது

நான் சிறகு விரித்து பறந்திடப்
பெருவானமாகிறது

எனை
எதிர்ப்பின்றி
எச்சங்கடமுமின்றி
ஏந்திக் கொள்ளும் கிளையாகவும்
இருக்கிறது

நான் அதீதமாய்ப்பேசி
அளவளாவும் ஆழ்ந்த நட்புறவாகவும்

என் புனிதத்தின் புகழிடமாகவும்

நான் ஒளிந்து கொள்ளும்
புகலிடமாகவும்

நான் இறந்திடாமல் இருந்திடப்
பெருந்துணையாகவும் இருக்கிறது

கவிஞன் எனும் போர்வை!!

# பரிதாபங்கள்

நீ பார்க்கவில்லையதனால்
சுருங்கி விட்டது
என்னிதயம்

நீ பார்த்து விட்டாய்
இப்போது கொஞ்சம்
நிம்மதி...
ஆனாலும்,
இதயங்கள் இல்லாததில்
இன்னும் சுருங்கி விட்டது
இதயம்

முயற்சியில்
சற்றும் சளைக்காத
விக்கிரமாதித்தனாய் நான்...
அடுத்ததைப் பதிகிறேன்
அநாயாசமாய்க்காத்திருக்கிறேன்

நிச்சயம் கிடைக்கும்
இதயங்கள்...
நம்பிக்கைதானே வாழ்க்கை!

கதைகள் (stories) பரிதாபங்கள்...

# அன்பின் பிணி

சிரிப்பு
களிப்பு
தவிப்பு
ஏமாற்றம்
வெப்புசாரம்
கண்ணீர்
அழுகை

எல்லாமே உரியவரிடம்
ஒப்புவிக்க வேண்டும்
என்றில்லை

எல்லாமே அந்தந்த நேரங்களில்
வருவதுதான்
கட்டுப்படுத்த முடியாது
சட்டென நெகிழும் ஜாதி நீ
அதை வழித்தெறிந்து
கடந்து செல்
ஒருநாளில்
ஒரு சொல்லில்,
ஒரு இரகசியக்குரலில்,
ஓரிசையில்
ஒரு இதயங்கீறும் பாடலில்,
வந்துன்
செவியடைந்தவை
ஞாபகங்கொள்ளும் வேளை
பேரமைதி கொண்டு
இதயம் புன்னகைக்கக் காண்பாய்

அன்பினியவள்,
அன்பின் பிணி போக்கத்தெரியாதவள்!

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.